# தூய லூர்து அன்னை ஆலயம்

50, ஒபியர் சாலை, சிங்கப்பூர் 188690

தொலைபேசி: 6294 0624 – www.lourdes.sg

| | |
|---|---|
| **பங்குத்தந்தை:** அருட்திரு மைக்கேல் சீத்தாராம் *frmichaelsitaram@gmail.com* | **உதவிப் பங்குத்தந்தை:** அருட்திரு பால் இயோ *fryeopaul@gmail.com* |
| **உதவிப் பங்குத்தந்தை:** அருட்திரு தே. நித்திய சகாயராஜ் *nithiya@catholic.org.sg* | **பங்கு அலுவலகம்:** *ololsec@gmail.com* *ololpastoral@gmail.com* |

| | | |
|---|---|---|
| **03 மார்ச் 2019** | **பொதுக்காலம் எட்டாம் ஞாயிறு** | **மூன்றாம் ஆண்டு** |



# உங்கள் சிந்தனைக்கு...

பொதுக் காலத்தின் எட்டாம் ஞாயிறுத் திருப்பலிக் கொண்டாடத்தில் பங்கேற்க வந்துள்ள இறைமகன் இயேசுவின் அன்பர்களே! உங்களை அன்புடன் வாழ்த்துகிறோம்.

மனிதனுடைய வார்த்தைகள் தான் மனதிலுள்ள எண்ணங்களை வெளிப்படுத்துகின்றன. “சல்லடையில் சலிக்கின்ற போது உமி தங்கிவிடுவது போல, மனிதரின் பேச்சில் மாசு படிந்து விடுகிறது. இன்றைய முதல் வாசகத்தில் சீராக்கின் ஞான நூல் நாம் பேசுவதற்கு முன்னால் நம்மையே நாம் சோதித்துப் பார்க்க வேண்டும் எனக் கூறுகின்றது. இரண்டாம் வாசகத்தில், திருத்தூதர் பவுலடியார் கொரிந்தியருக்கு எழுதிய முதல் திருமுகத்தின் வழியாக அவர்களுக்கு சாவைப்பற்றி ஏற்பட்ட அச்சத்தை நீக்குகிறார். எப்படி ஒரு விதையானது மண்ணில் மடிந்து மீண்டும் உயிர் பெற்று எழுகிறதோ அதைப் போல் நாமும் கிறிஸ்துவில் மரித்து இறுதிநாளில் சாவை வெற்றிக் கொண்டு அவரைப்போல உயிர்த்தெழுவோம் என்கிறார்.

இன்றைய நற்செய்தி வாசகத்தில் இயேசு உவமையின் வாயிலாகப் பல அறிவுரைகளை நம் மனதில் பதிவு செய்கின்றார். நாம் அடிக்கடி பிறருடைய குற்றங்களை மிகைப்படுத்தி அவர்களைக் கடுமையாக விமர்சனம் செய்கின்றோம், அவ்வாறு செய்வதற்கு நமக்கு உரிமையில்லை என்கிறார் இயேசுக் கிறிஸ்து. ஏனெனில் நம்மிடத்தில் கணக்கற்ற குற்றங்கள் உள்ளன. முதலில் நம் கண்ணில் உள்ள மரக்கட்டயை எடுத்துவிட்டு அதன்பின் மற்றவர் கண்ணில் இருக்கும் துரும்பை எடுக்க முன்வரவேண்டும்.
தனது நிலையை அறியாமல் அடுத்தவர்களைக் குறைகூறும் மனிதர்கள் ஒரு விதத்தில் மனநோயாளிகள் எனலாம்.

தன்னையே முழுவதும் அறிவதுதான் வாழ்க்கையின் முதற்படி. தன்னை முழுமையாகப் புரிந்தவன் பிறரையும் புரிந்துக் கொள்வான். ஒருவன் தன்னையே நன்கு புரிந்துகொண்டால்தான் நிறை, குறைகளோடு மற்றவர்களை ஏற்றுக்கொள்ள முடியும். தான் செய்யும் தவறுகளை ஏற்றுக்கொண்டு கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்பவன் தான் பிறருக்கு வழிகாட்ட முடியும். இருளைப் பழிப்பதைவிட ஒளியேற்றுவதே மேல் என்பதை உணர வேண்டும். தன்னிடம் இருக்கும் தவற்றை அறியாது வாழ்ந்து கொண்டிருக்கும் மனிதர்கள் இன்று அதிகம். முதலில் நாம் திருந்துவோம்; பிறகு மற்றவர்கள் திருந்த அறிவுரைகள் சொல்வோம், வழிக் காட்டுவோம். இத்திருப்பலியில் உளமாறக் கலந்து மாற்றம் காண்போம்.

## தமிழ் மறைக்கல்வி வகுப்புக்கள்



ஒவ்வொரு வாரமும் ஞாயிற்றுக் கிழமை காலைத் தமிழ் திருப்பலி முடிந்ததும், நமது ஆலயத்தில் தமிழில் மறைக்கல்வி வகுப்புக்கள் நடைபெறுகின்றன. உங்கள் பிள்ளைகளும் கடவுளைப்பற்றிய அறிவிலும் ஞானத்திலும் வளர அவர்களை அனுப்பி வையுங்கள்.



## இரண்டாவது காணிக்கை

ST VINCENT DE PAUL HELPS PEOPLE

இன்று திருப்பலிகளில் எடுக்கப்படும் இரண்டாவது காணிக்கை, தூய வின்சென்ட் தெ பவுல் சபையினர் செய்யும் நற்பணிகளுக்காகப் பயன்படுத்தப்படும். உங்கள் தாராள மனதிற்கு மிக்க நன்றி.





## மந்திரிக்கப்பட்ட குருத்தோலைகள் சேகரிப்பு

கடந்த ஆண்டு குருத்து ஞாயிறின் போது மந்திரிக்கப்பட்ட குருத்தோலைகள் விபூதிப்புதன் அன்று எரித்துப் பயன்படுத்த வேண்டியிருப்பதால், உங்கள் குருத்தோலைகளை ஆலயத்தில் வைக்கப்படவுள்ள சேகரிப்புப் பெட்டியில் போடுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

## விபூதிப் புதன் (06-03-2019) திருப்பலி நேரங்கள்




மதியம் 12:30 மணி மற்றும் மாலை 6:30 மணி (ஆங்கிலம்)
இரவு 8:00 மணி (தமிழ்)

திருப்பலியில் கலந்து கொண்டு இறையாசீருடன் அருளின் காலமான தவக்காலத்தை ஆரம்பிக்க அன்புடன் அழைக்கின்றோம்.

**குறிப்பு: அன்று ஒரு சந்தியும், சுத்த போசனமும் அனுசரிக்கப்பட வேண்டிய நாள்**

தவக்காலத்தின் ஒவ்வொரு வெள்ளிக் கிழமைகளிலும் இரவு 8 மணிக்குத் தமிழில் சிலுவைப் பாதையும் அதனைத் தொடர்ந்து திருப்பலியும் நடைபெறும்.



## தவக்கால ஆன்மீக கையேடு

நமது சிங்கப்பூர் உயர் மறைமாவட்டத்தின் புதிய நற்செய்தி அறிவிப்பு மையத்தினால், தவக்கால ஆன்மீக கையேடு தமிழ் மொழியில் தயார் செய்யப்பட்டு நமக்காக வழங்கப்பட்டுள்ளது. தயவு செய்து அனைவரும் ஒரு பிரதியை எடுத்துச் சென்று பயன்பெறவும்.

ONE
OFFICE FOR THE NEW
EVANGELISATION



## முழு இரவுத் திருவிழிப்பு செப வழிபாடு

**09-03-2019 சனிக்கிழமை, இரவு 9:30 முதல் காலை 5:30 வரை**

இரவு முழுதும் விழித்திருந்து, இறைவனின் அன்பை சுவைக்கவும், அவரைப் பற்றி மேலும் அறிந்து, அவரோடு உறவாடவும் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு உங்களை அன்புடன் அழைக்கிறோம்.





## நற்கருணை ஆராதனை வழிபாடு

**இன்று மாலை 5:00 மணி**

திவ்விய நற்கருணையில் வீற்றிருக்கும் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவுடன் ஒரு மணி நேரம் செலவிட்டு அவருடைய ஆசீரைப் பெறவும், நம் குடும்பங்களை ஒப்புக் கொடுக்கவும், குருக்களுக்காகவும், தேவ அழைத்தலுக்காகவும் செபிக்கவும் உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

## ஞாயிறு வாசகங்கள்



| | |
|---|---|
| **முதலாம் வாசகம்:** | சீராக்கின் ஞானம் 27-4-7 |
| **பதிலுரைப்பாடல்:** | திருப்பாடல் 92: 1-2. 12-13. 14-15 (பல்லவி: 1a) |
| **பதிலுரை:** | ஆண்டவருக்கு நன்றியுரைப்பது நன்று. |
| **இரண்டாம் வாசகம்:** | 1 கொரிந்தியர் 15: 54-58 |
| **வாழ்த்தொலி:** அல்லேலூயா, அல்லேலூயா! வாழ்வின் வார்த்தையைப் பற்றிக்கொள்ளுங்கள். உலகில் ஒளிரும் சுடர்களாகத் துலங்குவீர்கள். அல்லேலூயா. | |
| **நற்செய்தி வாசகம்:** | லூக்கா 6: 39-45 |

## ஆலயத் திருப்பலி நேரங்கள்



| | |
|---|---|
| வார நாட்கள் (ஆங்கிலம்) : | மதியம் 12:30 & மாலை 6:30 மணி |
| சனி (ஆங்கிலம்) : | மாலை 6:00 & 7:30 மணி |
| ஞாயிறு (ஆங்கிலம்) : | காலை 7:30, 11:30 & 1:00 மணி |
| ஞாயிறு (தமிழ்) : | காலை 9:30 & மாலை 6:30 மணி |
| பொது விடுமுறை: | காலை 9:00 மணி (ஆ),10:00 மணி (த) |

## ஆலயத்தில் நடைபெறும் பக்தி முயற்சிகள்

| | | |
|---|---|---|
| ஆங்கிலம் | வார நாட்களில் செபமாலை : | மதியம் 11:55 மணி |
| | திங்கள் & புதன் செபமாலை : | மாலை 5:55 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை : | வெள்ளி மாலை 7:00 மணி |
| | தூய ஆவியின் கத்தோலிக்க அருங்கொடை : | வெள்ளி மாலை 7:45 மணி |
| தமிழ் | செபமாலையும் விவிலியப் பகிர்வும் : | ஞாயிறு காலை 11:30 மணி |
| | செபமாலை : | ஞாயிறு மாலை 6:00 மணி |
| | தூய லூர்து அன்னை நவநாள் : | முதல் ஞாயிறு காலை 8:30 மணி |
| | சாட்சியக் கூடாரம் : | முதல் ஞாயிறு மதியம் 2:00 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை : | முதல் ஞாயிறு மாலை 5:30 மணி |
| | மரியாயின் சேனை : | செவ்வாய் மாலை 4:30 மணி |
| | குழந்தை இயேசு நவநாள் : | செவ்வாய் மாலை 4:30 மணி |
| | இறை இரக்கச் செபம் : | வெள்ளி மாலை 5:45 மணி |
| | இடைவிடா சகாய அன்னை நவநாள் : | சனி மாலை 8:30 மணி |
| | புனித பியோ செப வழிபாடு : | மாதத்தின் 23ம் தேதி இரவு 8:30 மணி |

தூய லூர்து அன்னை சமூகக் கூடக் கட்டுமானத் திட்டமானது மறுபரிசீலனை செய்யப்படுகிறது. எனவே, மறு அறிவிப்பு வரும் வரை அதற்கான நிதி திரட்டும் முயற்சிகளை உயர்மறைமாவட்டம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கும்படிக் கேட்டுக்கொண்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**உங்கள் கவனத்திற்கு:** உயர்மறைமாவட்டம் மற்றும் பங்குத்தந்தையின் அனுமதியின்றி நம் பங்கு வளாகத்திலோ, அல்லது உங்கள் இல்லத்திலோ, உங்களுக்காக செபிப்பதாகக் கூறிக் கொண்டு, நன்கொடை கேட்பவர்களை ஏற்க வேண்டாம். ஆலயத்திற்கு நீங்கள் கொண்டு வரும் உடைமைகளுக்கு நீங்களே பொறுப்பு. நன்றி.

